| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 08.04.2026 | |
| STC No.1024/2025 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திருமதி.சசிகலா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. நாராயணசாமி | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 55/2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் பன்னாங்கொம்பில் குடியிருந்து வருகிறேன். எதிரியை எனது கணவர் மூலமாக எனக்கு தெரியும். எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் ஆர்.எஸ். மணியாரம்பட்டியில் குடியிருக்கிறார். எதிரி ஆர்.எஸ். மணியாரம்பட்டியில் குடியிருக்கிறார் என்று நான் வழக்கு தொடர்ந்தேன் என்றால் குடியிருக்கிறார் என்று சொல்லியுள்ளேன். எனது கணவர் சொன்னது தான் எதிரி எங்கு இருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எவ்வளவு காலம் எதிரியை எனது கணவர் மூலமாக தெரியும் பத்து வருடமாக தெரியும். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது.

2. நான் வட்டிக்கு பணம், கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு வருமான என்னவென்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனது பெயரில் நிலங்கள் உள்ளதா என்றால் எனது கணவர் பெயரிலும், எனது பெயரிலும் உள்ளது. எனது குடும்பம் நிர்வாகத்தை யார் பார்த்து வருகிறார்கள் என்றால் இரண்டு பேரும் பார்த்து வருகிறோம். வரவு, செலவு இரண்டு பேரும் செய்து வருகிறோம். குடும்ப வருமானம் யார் கைவசம் வைத்துள்ளார்கள் என்றால் இரண்டு பேரிடம் உள்ளது.

3. எதிரிக்கு யார் பணம் கொடுத்தது என்றால் நான்தான் பணம் கொடுத்தேன். எனது கணவரிடம் கேட்டு எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் என்னிடம் எதிரி நேரடியாக பணம் கேட்டார், நான் எனது கணவரை கேட்டுக்கொண்டு

எதிரிக்கு பணம் கொடுத்தேன். எதிரி என்ன ஊர், என்ன செய்கிறார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் ஜனவரி 2025 ம் ஆண்டு பணம் கேட்டாடர். என்ன கிழமை என்று ஞாபகமுள்ளதா என்றால் முதல் வாரம் என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. பணம் கடன் கொடுக்கும் போது ஏதாவது எதிரியிடம் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் காசோலை கொடுத்துவிட்டுதான் பணம் பெற்றார்.

4. எதிரி பூர்த்தி செய்து கையெழுத்து போட்டு காசோலை கொடுத்தாரா என்றால் ஆமாம். கடனிற்கு ஏதாவது வட்டி பேசினேனா என்றால் 2 வட்டி போட்டு தருவதாக சொன்னார்கள். எவ்வளவு காலம் என்னிடம் கேட்டார் என்றால் 25 நாளைக்குள் பணம் திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி என்னிடம் காசோலையை கொடுத்து பணம் வாங்கினார். என்னிடம் வாங்கிய பணத்திற்கு கேரண்டிக்காகத்தான் காசோலை கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி என்னிடம் கடன் வாங்கிய தேதியை வீட்டில் ஏதாவது நோட்டில் எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை.

5. எதிரி என்னிடம் கடன் கேட்கவில்லை என்றும், என்னை யார் என்றே எதிரிக்கு தெரியாது என்றும், காசோலையை கொடுத்து என்னிடம் எதிரி பணம் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லப்படும் நாள் ஞாயிற்றுக்கிழமையா என்றால் என்ன நாள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், எதிரி எனக்கு காசோலை கொடுக்கவில்லை என்றும் அதனால் எனக்கு கடன் கொடுத்த தேதி பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல.

6. 25 நாள் முடிந்தவுடன் எதிரி கொடுத்த காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் 2 தேதிகள் போட்டு காசோலைகள் கொடுத்தார். குறிப்பிட்ட அந்த தேதிகளில் பணம் இல்லை என்பதால் என்றும் வேறு தேதிகளில் போடச்சொல்லி சொன்னார். காசோலை போட வேண்டாம் என்று எப்படி சொன்னார் என்றால் நேரடியாக சொன்னார். நான் சொல்வது பொய் என்றும் எதிரி என்னை பார்த்தது கூட கிடையாது என்றால் சரியல்ல. எதிரி தொழிலில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று ஐபி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எதிரி ஐபி கொடுத்த விபரத்தை தெரிந்துக்கொண்டு எனது வேண்டிய நபர்கள் மூலமாக காசோலையை பெற்று எதிரி மீது வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததை காட்டுவதற்கு எந்தவிதமான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது புகார் மனுவில் எனது கணவர் முன்னிலையில் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

உண்மையிலியே எனது கணவர் வைத்து பணம் கொடுத்திருந்தால் அந்த விபரத்தை புகாரில் சொல்லியிருப்பேன் என்றும் பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காசோலையை வங்கியில் வசூலுக்கு யார் மூலம் கொடுத்தேன் என்றால் நான் தான் வங்கியில் சென்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். 28.04.2025 அன்று Account Closed என்று வங்கியில் கூறினார்கள். அதன்பின்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பின்பு எதிரி எங்குள்ளார் என்ற விபரத்தை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கும் போது எதிரி எந்த விலாசத்தில் குடியிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

8. எதிரிக்கு வேண்டாத நபர்கள் மூலமாக ஏற்படுத்தப்பட்டது தான் இந்த வழக்கு என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியான கடன் செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுத்ததை நிருபணம் செய்யாத வரையிலும் இந்த காசோலை வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.